# ஜநவிநோதிநி.

இல. 3, 4.] { மார்ச்சுமீ / ஏப்ரல்மீ } 1884. [புஸ்த. XV.

## இமயமலை

இப்பூமண்டலத்திலுள்ள எல்லாப் பருவதங்களினும் மிகப் பெரிய பருவதமாகிய இமயமலையைப்பற்றி முன்னொரு சஞ்சிகையில் விவரமாய் எழுதியிருக்கின்றோமாயினும், அதிலுள்ள விருக்ஷவகைமுதலான காட்சிகளைக் கண்ணாரக் காணும்பொருட்டு அதனழகைக்குறிக்கும் ஓர் படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்து அதன் விளைபொருளா செடிகொடி முதலியவற்றின் வரலாற்றைச் சிறிது இங்கு எடுத்துரைக்கின்றோம்.

இவ்விந்துதேசத்துக்கு ஒரு பெரிய மதிட்சுவர்போல வடபுறமெங்கும் வியாபித்திருக்கின்ற இமயமலைத்தொடரானது அளவற்ற நீர்களைச் சேர்த்துவைத்துத் தாழ்வரையிலுள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்சுகின்றது. மழைக்காலங்களில் விசேஷமாய்ப் பெய்கின்ற மழையினால் இமாசலத்தின் தென்னண்டைப் புறமெல்லாம் மிகச்செழிப்பாயிருக்கின்றது. ஆயினும் எப்போதும் பிரவகிக்கின்ற பிரவாகங்களால் நிலத்தின் ஸாரமெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு அம்மலையின்மேல் அநேகவிடங்கள் செடிகொடிகள் ஒன்றும் முளைக்காமல் எப்பொழுதும் வறட்டு நிலமாயிருக்கின்றன. இமவத்பருவதத்தின் கொடிமுடிகளெல்லாம் எக்காலத்திலும் பனியினால் மூடப்பட்டும், மத்தியபாகங்களெல்லாம் செடிகொடியொன்றுமில்லாமல் வறண்ட பாலைநிலமாயும் இருக்கின்றன. அங்குள்ள கணவாய்களும் தாழ்வரைகளுமோ அப்படியில்லை; விசேஷமாய்க் காடுகள் வளர்ந்திருக்கின்றன; அவை பண்படுத்திப் பயிர்செய்வதற்கும் ஏற்றவிடமாம்.

இமயமலையில் இத்தேசத்துக்கு நேராக இராநின்ற தென்புறத்திலே விருக்ஷவர்க்கங்கள் மூன்றுவகையாயிருக்கின்றன. அவை அடியில் உஷ்ணதேசத்து விருக்ஷங்களும், அதற்குமேல சமசீதோஷ்ண

தேசத்தவைகளும், அதன்மேல் சீததேசத்துப் பூண்டுவகைகளு மாம். கீழண்டைத்தொடர்களில் மிகுதியாக மழைபெய்யும்போது பலவிதமான விருக்ஷவர்க்கங்களோடுகூட ஒருவகை மலைப்பூண்டு களும் மிகுதியாக வளரும. அமமலையின்மேல் தேவதாரு முதலிய விருக்ஷங்கள மிகப்பருததது வளர்ந்து ஆகாயமளாவியவைகளாயிருக் கின்றன. கீழ்ப்புறமாயுள்ள கணவாய்களில் மூங்கிற்புதர்களும் பின் னும் பலவிதமான விருக்ஷங்களுமம அபரிமிதமாக முளைத்து அந்தப் பெருமலைத்தொடர்க்கு ஒரு அலங்காரமாயிருக்கின்றன. அங் குள்ள விருக்ஷங்களின் கிளைகளிலேயே பலவகைப் பாசிகளும் கொடிகளும் படர்ந்து அவற்றிற்கு ஒரு அழகாயிருக்கின்றன. இமயமலையிலுள்ள செடிகொடிகளைக்கொண்டே இத்தேசத்திலுள்ள அங்கிலேயர்களும் மற்றவர்களும் தமது சிங்காரத்தோட்டங்களை யும் கோடைக்காலத்து மாளிகைகளையும் அழகுசெய்துகொண்டிருக் கின்றனர்.

இமயமலையின்மேல் வாசஞ்செய்பவர்கள் வாற்கோதுமையும் ஓத்ஸ் என்னும் ஓர்வகைத் தானியமும் மற்றும் சில சிறுதானியங் களும் பயிரிடுகின்றனர்; காய்கறிவகைகளும் விசேஷமாய்ப் பயிரி டுகின்றனர். இங்கிலாந்துதேசத்திலிருந்து கொண்டுவந்து பயிர் செய்யப்பட்டதான உருளைக்கிழங்கு முன் காடாயிருந்த பலவிடங் களிலும் இப்போது மிகுதியாய்ப் பயிரிடப்படுகின்றது. எக்காலத் திலும் நீருக்குப் பஞ்சமில்லாத சிலவிடங்களில் நெல்லும் பயிர் செய்யப்படுகின்றது. அங்கிருந்து வெளித்தேசங்களுக்குக் கொண் டுபோய் வியாபாரம்செய்யத்தக்க முக்கியமான சரக்குகள் என்ன வென்றாலோ, கட்டடங்கள் கபபல்கள் முதலானவை நிருமிப்ப தற்கு உபயோகமான பெரிய வெட்டுமரம், கரி, வாற்கோதுமை, தினை, உருளைக்கிழங்கு முதலியவைகளும், தேன்முதலிய காடுக ளிலுண்டாகும் பலவகைப் பொருள்களுமாம். அம்மலைமேல் மிக நெருககமாய்ச் செங்குத்தான வழிகளில் சுமைகளை ஏற்றிக்கொண்டு ஏறவும் இறங்கவும் தட்டுவாணிக்குதிரைகளும் கோவேறுகழு தைகளுமே உபயோகப்படுகின்றன. மலையில வாசஞ்செய்கிற பெண்களுமம புருஷர்களுங்கூடத் தங்கள் ஜீவனத்துக்காக தேவ தாரு மரக்கட்டைகளையும், நுனிகுவிந்த ஓர்வகைத் தானியக்கூடை களையும், மற்றும் வேண்டிய பற்பல சாமான்களையும் தூக்கிக்கொ ண்டு அம்மலைவழிகளில் ஏறி இறங்குகிறார்கள்.

## ஸர் ஸாலர்ஜங்.

ஐதராபாத் அல்லது நிஜாம் ராஜ்யமானது இவ்விந்துதேசத்திலுள்ள சுதேச ராஜ்யமனைத்திலும் மிகப் பெரிய ராஜ்யமாகி, விஸ்தீரணத்தில் அதற்கு இரண்டாவதாயிருக்கின்ற மைசூர், க்வாலியர், ராஜ்யங்களைப்பார்க்கிலும் மூன்றத்தனை பெரிதாயிருக்கின்றது. அது ஏறக்குறைய ஐரோப்பாவிலுள்ள பிரான்சு தேசத்திற்குச் சமானமென்று சொல்லலாம். இந்த ராஜ்யம் முன்னொருகாலத்தில் நர்மதையாறு தொடங்கி திருச்சினாப்பள்ளிவரையிலும், மசலிபட்டணம் தொடங்கி பீஜபூர்வரையிலும் வியாபித்திருந்தது. ஆயினும் அடிக்கடி ஈஸ்து இந்தியாகம்பனியாருக்கு நாடுகளைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுக்கொண்டு வந்ததனால் இப்போதிருக்கின்ற குறுகலான நிலைமைக்கு வந்திருக்கின்றது. இப்போது அந்த ராஜ்யம் 25,337 சதுரமைல் பரப்புள்ளதாகி ஒரு கோடிக்கதிகமான குடித்தொகையுள்ளதாயிருக்கின்றது. இப்போது அந்த ராஜ்யத்தை ஆளுகிற நிஜாமினுடைய வம்சமானது ஔரங்கஜீப அரசாண்டகாலத்தில் அவன்கீழ் ஓரதிகாரியாய் இருந்த அஸிப்ஜா அல்லது நிஜாமுல்மல்க் என்பவனிடத்திலிருந்து உற்பத்தியானது. அவன் பெருக்குமாத்திரம் ராஜாவுக்கு அடிமைப்பட்டவனாக நடித்துக்கொண்டு தென்னிந்தியாவில் ராஜப்பிரதிநிதியாய் அரசாண்டு, கடைசியாய்ச் சுதந்தர ராஜாவென விளம்பரஞ்செய்தான். அதுமுதற்கொண்டு இந்த ராஜபரம்பரை வரிசையாக வருகின்றது. ஐதராபாத்தின் அரசர்கள் எப்போதும் அங்கிலேய துரைத்தனத்தார்க்கு உண்மைதவறாமல் நடந்துவந்தனர். பிராஞ்சுக்காரரோடும் மகாராஷ்டிரர்களோடும் கர்னாடகதேசத்து நபாபுவோடும் சண்டைசெய்தகாலங்களில் அங்கிலேயருக்கு அவர்கள் மிகவும் ஆப்தர்களாயிருந்தனர்.

நிஜாம ராஜ்யத்துப் பிரதானமந்திரியாயிருந்த ஸர் ஸாலர்ஜங் என்பவர் 1829-௵த்தில் பிறந்தவர். அவர் 20 வயதுக்குள்ளேயே கல்விகேள்விகளில் மிகத் தேர்ச்சியடைந்தவராகி, 25-வது வயதான 1853-௵த்தில் தன்னுடைய சிற்றப்பனான ஸிராஜ் உல்முல்க் என்பவருக்குப் பதில் நிஜாம்ராஜ்யத்தில் மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஐதராபாத்து மந்திரிப்பட்டமானது வேலையின்றி வருமானமுள்ளதான ஒரு அதிகாரமென்றெண்ணக்கூடாது. அது மிகவும் கௌரவமான உயர்ந்த அதிகாரமானாலும், அநேகம் சங்கடங்களும் அதைச் சேர்ந்திருக்கின்றன. நிஜாமைச் சூழ்ந்திருக்கின்ற பிரபுக்கள் ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுடைய பொறாமையாலேயே அந்தத் தீமைகள் உற்பத்தியாகின்

றவை. ஸாலர்ஜங் ஆனவா அங்கிலேய துரைத்தனத்தாருடைய சம்மதியின்மேலேயே இந்த அதிகாரம்பெற்று அன்றுமுதல்அவர்களால் தாங்கப்பட்டுத் தன்னுடைய ராஜகாரியங்களையும் சில வருஷகாலம் ராஜபக்தியோடு யாவருங் கொண்டாடும்படி நடத்திவந்தாராயினும், அவாமேல் பொறாமைகொண்டிருந்த பகையாளிகளாகிய சிலருடைய தந்திரங்களால் அவர்க்குத் தெரியாமலே திடீரென்று 1861-௵த்தில அவரை அதிகாரத்தினின்றும நீக்கும்படியாக நேரிட்டது. ஆயினும அவ்விடத்து ரெஸிடெண்டினுடைய மத்தியஸ்தத்தினால், அவவதிகாரத்திற்கு அவர்தவிர மற்றெவரும் தகுந்தவரல்லரென்று கண்டறிந்து மறுபடியும அவர் அந்த அதிகாரபதத்தில் நியமிக்கப்பட்டார்.

ஸாலர்ஜங் செய்த செய்கைகளை முற்றும் நன்றாய்க் கண்டுகொண்டாடவேண்டுமாயின், அவர் அதிகாரத்துக்கு வந்தகாலத்தில் அத்தேசமிருந்த நிலைமையை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். யுத்தம்செய்த சேனைகளுடைய செலவுக்காகப பிடித்த பாக்கியைத் தீர்க்கும்படியாகவும், அதற்குப்பிறகு கிரமமாய்ச் சேனைகளுக்குப் பிடிக்கும் செலவுகளைக் கொடுத்துக்கொண்டு வருவதற்கு ஈடாகவும் நிஜாம் ராஜ்யத்திலுள்ள மிகச சிறந்த சில மாகாணங்களை அங்கிலேயதுரைத்தனத்தார்க்குக் கொடுக்கும்படியாக ஒரு சமாதான உடன்படிக்கை நடந்தசெய்தி இந்துதேச சரித்திரம் படித்த பலருக்குத் தெரியுமல்லவா? அதற்கு ஆறுநாள முன்புதான் அவர் ஐதராபாதது ராஜ்யத்தில பிரதானமந்திரியாக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் அந்தராஜ்யத்து அரசிறைப் பொக்கிஷசாலை ஒன்றுமில்லாமல் சூனியமாயிருந்தது; அந்தத்தேசம் எங்கும முற்றும் ஒழுங்குதப்பிக்கிடந்தது. துஷ்டர்களான பலர் கூட்டங்களாகக்கூடி அத்தேசமெல்லாம் திரிந்து கொள்ளையடித்துக்கொண்டிருந்தார்கள். அதனால் அங்கிலேய துரைத்தனத்தா அவர்கள் மேல் அதிக நோக்கங்கொண்டு எச்சரிக்கை சொல்லிவரும்படியாக நேரிட்டது. குடிகள் செலுத்தவேண்டியத் தீர்வைமுதலான வரும்படிகளெல்லாம வசூல்செய்யப்படாமல் பாக்கியில நின்றுபோய்க் குத்தகைக்காரர்களுடைய அதீனத்தில் ஒப்புவிக்கும்படியாக நேரிட்டது; அந்தக் குத்தகைக்காரர்கள் குடிகளைச சித்திரவதைசெய்து அவர்களிடத்தினின்றும் எவ்வளவு பிடுங்கக்கூடுமோ அவ்வளவையும் அடித்துப பிடுங்கிக்கொள்வார்கள். குடிகள் வருத்தப்படுவதேயன்றி ராஜாவுக்கு அதனால் யாதொரு நன்மையுமில்லை; அவர்கள் கைப்பற்றுகிற பொருளில் பத்திலொருபங்கு அரசனுடைய பொக்கிஷம்போய்ச் சேருமோ சேராதோ? நியாயவிசாரணையென்ற பாவனைகூட நடந்ததாகத் தோன்றவில்லை. குற்றம் செய்தவர்களும் அதற்கு ஆளானவர்களும் தாமே தங்கள் வியவகாரத்தைத் தீர்த்துக் கொள்வதேயொழிய கிரமமான நியாயவிசாரணை கிடையாது; பல

வான் எவனோ அவன் செய்ததுதான் நியாயமாக முடியும. அதனால் பெரியபிரபுக்களும் ஜாகீர்தார்களுமாத்திரமேயல்ல; இதரமான அற்ப உத்தியோகஸ்தர்களும தங்கள் கீழ்ப் பலமனிதர்களைக் கூட்டிக்கொண்டு சமயம் நேர்ந்தபோது தங்கள் அதிகாரிகளை எதிர்க்கச் சித்தமாயிருப்பாரகள். நியாயவிசாரணைச் சபையென்பது வாஸ்தவத்தில் ஒன்றுகூடக் கிடையாது. ஊர்க்கலகங்களை அடக்கும் அதிகாரியான கொத்வால் என்னும் போலீசு அதிகாரிதானே சாதாரணமான குற்றங்களையெல்லாம் விசாரித்துவநதான். கொஞ்சம் பலமான வியவகாரங்களோ, முன்னமே கக்ஷிக்காரர்களுக்குள் சரிப்பட்டுப்போகாதபக்ஷத்தில், மகம்மதியர்களுடைய கோவிலுக்குத் தலைவனான காஜியினால் தீர்க்கப்பட்டுவந்தன; அவன் பரிதானம் முதலியவைகளுககு வசப்பட்டவனாயிருந்தான்.

ஸாலாஜங் மந்திரியாக நியமிக்கபபட்டபோது நிஜாம் ராஜ்யம் இத்தன்மையான நிலையிலிருந்தது. அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்துதானானாலும் அக்காலத்தில் அவர் செய்த செய்கைகள் அனைவரும் புகழத்தக்கவையாயிருக்கின்றன. இத்தேசத்தில் கலகம் அதிகமாகியிருந்த காலங்களில் ஐதாபாத்து ராஜ்யம் மிகவும் கொதித்துக்கொண்டிருந்தது. அத்தேசத்தவர் எல்லாரும அநேகமாய் அங்கிலேயர் விஷயத்தில் துரோகசிந்தையுள்ளவரானார்கள். கத்திகட்டிகளும் கலகக்காரருமான அநேகா அங்கிலேயர்க்கு விரோதமாய்க் கலகம்செய்து எதிாக்க எப்போ உத்திரவாகப்போகிறதென்று அரசனுடைய வாய்மொழியை எதிர்பார்த்துப் பதைத்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் ஸாலாஜங் வயதில் சிறியவராயினும் யுக்தி புத்திகளில் பெரியவராகி நன்றி மறவாதவராய் அக்கலகங்களையடக்கி அங்கிலேயர்விஷயததில் உண்மையாகவே நடந்துவந்தார்.

தன் சுவாதீனத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஐதராபாத் ராஜ்யத்தைச் சீர்திருத்துகிறவிஷயததில் அவா செய்த காரியங்களும இதற்குக் குறைந்தவையல்ல: ஒழுங்குதப்பித் தாறுமாறாய்க் கிடந்தவிடங்களையெல்லாம் நன்றாய்ச் சீரப்படுத்திவைத்தார். அத்தேசத்து ஜனங்களுடைய மதசம்பந்தமான பிடிவாதங்களையும் துராபிமானங்களையும் கொடுமைகளையும விலக்கத்தக்க ஏற்பாடுகளையெல்லாம் ஏற்படுத்தினார். இவ்விஷயங்களில் அத்தேசத்தா அவரைக் கொடுமையாய்ப் பகைத்தார்களாயினும் அவற்றையெல்லாம்வென்று தான்பிடிததகாரியத்தை நிறைவேற்றி ஐதாபாத்து ராஜ்யத்துச் சரித்திரத்தில் தன்பேர் என்றுமழியாமல் இருக்கும்படி செய்துகொண்டார். முற்காலங்களில் ராஜாங்கத்தைபபற்றிய சகலமான காரியங்களுக்கும் மந்திரியே உத்தரவாதமாயிருக்கும்படி எல்லாச் சுமையையும் அவன் தலையிலேயே வைத்திருப்பது வழக்கம. பலவிதமான தொழில் துறைகளுக்கும் அவன் ஒருவனே தலைவனாகி எல்லாக்காரி

யங்களையும் நேராகவே விசாரித்து வருவதாகக் கருதப்பட்டிருந்தது. இது எவ்வளவேனும் கூடுமோனகாரியமா யோசித்துப்பாருங்கள்! அதனால் அவன் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் தாமே சுதந்தரராகித் தம்மனம்போனபடி போக ஆரம்பித்து ராஜாங்கத்து நன்மையை அழிப்பவரானார்கள். கண்ணெதிரிலுள்ளவர்களே இவ்வண்ணம் இருக்க, கண்மறைவாய் வெளிஜில்லாக்களிலுள்ள உததியோகஸ்தர்களுடைய நடத்தைகளைப்பற்றிக் கேட்கவேண்டுவதென்ன? மேலும அவ்வளவு காரியங்களையும் மந்திரியொருவனே பார்த்து வருவதென்றால் எபபடி சாததியபபடும்? இத்தன்மையான குறைபாடுகளெல்லாம் நீங்கும்படி சில நல்ல ஏற்பாடுகள் செய்து, அநேகம் வியாபாரங்களை வேறு உத்தியோகஸ்தர் வசம் ஒப்புவித்ததுமன்றி, ராஜ்யபரிபாலன விஷயததில் சில பிரபுக்கள தனக்குத துணையாய் இருக்குமபடியாகவும் செய்துகொண்டார்.

அவர் காலததிற்குமுன்னே தீர்வை வசூல்செய்வதெல்லாம் குத்தகைகொடுப்பதே வழக்கமாயிருந்ததென்று சொன்னோமே. இப்பொழுது எல்லாத்தீர்வையும் ராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களாலேயே வசூல்செய்யப்படுகின்றன. அதனால் ராஜாங்கத்து வருமானம் விசேஷமாய் அதிகப்பட்டு வருகின்றது. குத்தகைக்காரரகள் முற்காலங்களில் செய்துவந்த நிர்ப்பந்தங்களும் வருத்தங்களும் நீங்கிக் குடிகளும் சௌக்கியப்படலானார்கள். ஸாலர்ஜங் மநதிரியாக வருவதற்குமுன்னே அத்தேசத்தில் நிலங்களைப் பற்றிய ஒழுங்குபாடு ஒன்றும் கிடையாது. அதிகாரியின் புத்திக்குத் தோன்றியபடி அவன் எந்தநிலத்திற்கு என்னதீர்வை விதிக்கிறானோ அதைக் கட்டாயமாய்க் கட்டித் தீரவேண்டியதாயிருந்தது. இப்பொழுதோ சென்ற 15 வருஷகாலததில் நிஜாம் ராஜ்யத்திலுள்ள நிலங்களெல்லாம செம்மையாய் அளந்து ஒழுங்குபடுத்தப்பட்டுவருகின்றன. நியாயவிசாரணையைப்பற்றிய பார்த்தாலோ அதுவும் இப்போது மிகவும் கிரமமானநிலையில் இருக்கின்றது. ஐதராபாத்துநகரத்தில் தலைமையான ஒரு நியாயஸ்தலமும், மற்ற மாகாணங்களில அதற்குக கீழ்ப்பட்ட ஒவ்வொரு நியாயவிசாரணைச்சபையும் உண்டு. கீழ்நியாயஸ்தலங்களில் நடந்த தீர்மானத்தின்மேல் ஐதராபாத்திலுள்ள பெரிய நியாயசபையில் மறுவிசாரணை செய்யலாகும். ஸாலர்ஜங் அத்தேசதது அதிகாரத்தில் தான்போய்ப் புகுந்தவுடனே படிப்படியாய் நகரத்திலும் நாடுகளிலும் பலவிதமான நியாயவிசாரணைச்சபை ஏற்படுத்தினார். மேலும் அவர் நியாயவிசாரணைசெய்யும் உத்தியோகஸ்தர்களை இந்தியாவின் வடமேற்கு மாகாணத்திலிருந்து அழைப்பித்தார். இதற்காக அவாமேல் அவாக்கு விரோதிகளான அநேகா குற்றம சாத்தினார்களானாலும் அவர் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் தான் நினைத்தகாரியத்தை நிறைவேற்றினார்.

சேனைகளின்விஷயத்தில் அவர் செய்த திருத்தங்கள் மிகவும் அதிசயிக்கத்தக்கவையாயிருக்கின்றன. முற்காலத்தில் ராஜாங்கத்திலுள்ள சேனைகளுக்கு வேண்டிய சம்பளம் செலவுகளைத் துரைத்தனத்தார் நேராகக் கொடுத்து வருவதில்லை. பின்னென்னவென்றால், ஒவ்வொரு பட்டாளத்தையும் ஒவ்வொரு சேனைத்தலைவர் வசம் ஒப்புவித்து, அச்சேனைகளுக்கு வேண்டிய செலவுகளைப்பற்றிக் குத்தகை ஏற்பாடு செய்துகொண்டு, அதற்காக அவர்களுக்கு விசேஷமான கிராமங்களை ஜாகீராகவிட்டு வந்தனர். அதனால் விளைந்த பயனென்னவெனில், அச்சேனைத்தலைவர்களெல்லாரும் தமது சொந்தத்திற்கு மிகுதியாய்ப் பொருள் சேர்த்துக்கொண்டு, யாருக்காக அந்த ஜாகீர்விடப்பட்டதோ அந்தப் படையாள்முதலியவர்களைப் பட்டினியாய்க் கிடக்கச்செய்தார்கள். ஸாலர்ஜங் வந்தபிறகு இந்த ஜாகீர்களையெல்லாம் அநேகமாய் வாங்கிவிட்டுச் சேனைச் சம்பளங்களைத் துரைத்தனத்தாரே நேராய்க் கொடுத்துவரும்படி ஏற்பாடு செய்தார். இப்பொழுது நிஜாம் தேசத்திலுள்ள நன்றாய்ப் பழகிய சேனைகள் 10,000-ம், அவ்வளவு பழகாத சாதாரணமான சேனைகள் 20,000-ம் இருக்கின்றன.

மேற்சொல்லிய விஷயங்களில் ஸாலர்ஜங் விசேஷமான திருத்தங்கள் செய்துவந்ததுமாத்திரமேயன்றி இன்னும் அநேக விஷயங்களில் சீர்திருத்தம் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்யலானார். யந்திர சிற்பசாலை, கல்விச்சாலை, வைத்தியசாலை முதலியவைகளை ஸ்தாபிப்பது அவற்றுள் முக்கியமானவையாம். இப்பொழுது அந்த ராஜ்யமெங்கும் பாலங்கள் கட்டிக்கொண்டும், பாதைகள் செப்பனிட்டுக்கொண்டும் வாய்க்கால்களும், குளங்களும் கிணறுகளும் புதிதாக வெட்டிக்கொண்டும், பழுதாய்ப்போனவைகளைச் செப்பனிட்டுக்கொண்டும், ஐரோப்பியர்களும், யூரேஷியர்களுமாய்ப் பல சிற்பிகள் சுற்றித் திரிந்துகொண்டிருக்கிறார்கள். எல்லா நகரங்களிலும், முக்கியமான கிராமங்களிலும் பல பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. வித்தியாப்பியாச விஷயங்களில் வித்தியார்த்திகளை உற்சாகப்படுத்தும்பொருட்டுத் துரைத்தனத்தார் பலவிதமான வித்தியார்த்தி வேதனம் கொடுத்துக்கொண்டு வருகின்றனர். சில வருஷங்களுக்குமுன்னே ஸாலர்ஜங் சுரங்கம் வெட்டுகிற வித்தையும், பூமி தத்துவசாஸ்திரமும் கற்றுப்பழகி வருவதற்காக இரண்டு சிறுவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பினார். மேலும் அந்த ராஜ்யத்தில் பல இடங்களிலே அநேகம் வைத்தியசாலைகளும் ஔஷதசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடத்துப் பிரதான வைத்தியருடைய விசாரணையில் வைத்தியசாஸ்திரம் கற்பிப்பதற்காக வைத்திய வித்தியா பாடசாலையும் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தன்மையாக ராஜ்யங்களைச் சீர்திருத்துவதில் மிகுந்த சாமர்த்தியமும் புத்திசாதுரியமும் உள்ளவரும் ராஜகாரிய நிர்வாகியும் மிகுந்த ராஜபக்தியுள்ளவருமான ஸாலாஜங் சென்றவருஷம் தேக வியோகமாயினார். அவர் ஏற்படுததிய ஒழுங்குபாடுகளெல்லாம் எந்நாளும் கிரமமாகவே நடத்தப்பட்டு வரவேண்டுமென்றும், அந்த தருமப்பிரபுவைப்போலவே பெரிய ஆஸ்தானங்களிலுள்ள மந்திரிகளும மற்ற உத்தியோகஸ்தர்களும் தம்முடைய பெயர் இவ்வுலகில என்றும் விளங்குமாறு அழியாப் புகழ்பெறும்படி சன்மார்க்கர்களாக நடந்துவரக்கடவர்களென்றும் நாம் கடவுளைப பிரார்ததிக்கக்கடவோம்.

---

## தூக்குத்தூக்கி

ஒரு பழையகதை—(தொடர்ச்சி).

ராஜகுமாரத்திக்கும் மந்திரிகுமாரனுக்கும் நடந்த ரகசியங்களைத் தூக்கிததூக்கி மஹாராஜாவினிடத்தில் அறிக்கைசெய்துவிட்டானென்று முன் ஸஞ்சிகையிற் சொன்னோமே. அதைக் கேட்டவுடனே மஹாராஜன் அந்த ஊரிலிருக்கும் தொழிலாளிகள் யாவருக்கும் சிக்கிரமாய் ஒரு உத்தரவு அனுபபி நாலுநாழிகைக்குள் அந்த ஊரிலும் சுற்றிய பத்துநாழிகை வழிதூரத்திலுமுள்ள தச்சன், கொற்றன், கொல்லன், ஒட்டன் முதலான தொழிலாளிகள் எலலோரையும் அழைப்பிதது, இரண்டுதினத்துக்குள் ஏழுநிலைமாடமுள்ள ஒரு பெரியமாளிகை தன் அரண்மனைக்குச சமீபத்தில் கட்டவேண்டியதென்று கட்டளையிட்டு, மந்திரிமுதலான எல்லா உததியோகஸ்தர்களையும் தங்கள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு அம்மாளிகை கட்டுவதற்கு வேண்டிய சாமக்கிரிகளைச் சேகரித்துக கொடுததுக்கொண்டிருக்கக கட்டளையிட்டு, தம் குமாரத்தியாகிய சநதிரமுகியினிடம் போய்த் திருடனைக் காப்பதுபோல அன்று முடிய அவளிடமே உட்கார்ந்திருந்தார். கணப்பொழுதும் வீணாகாமல் வேலை அதி மும்மரமாய் நடந்து அன்று அஸ்தமித்து நாலுநாழிகைக்கெல்லாம் வெகுவிசித்திரமாக மாளிகைகட்டி முடிந்துவிட்டது. முடிந்தசங்கதி கேட்டவுடனே சக்கரவர்த்தியானவர் ஸ்திரீகளின் அந்தப்புரத்தில் வேலைசெய்வதற்காக நியமிககபபட்ட பேடிகள் எல்லாரையும் கூப்பிட்டு முதல் மூன்றுமாடிகளில் கததியும் கையுமாக இருக்கும்படி அவர்களைக் காவலிட்டார். தான் குறிககப்போகிற சிலர்தவிர வேறு யாரும் அவ்விடம் நாடக்கூடாதென்றும், தன் உத்தரவு மீறிவருகிறவன் எவனாயிருந்தாலும் அவனை ஒரேவீச்சாய் வீசிபபோடவேண்டுமென்றும் கட்டளையிட்டு ஏழாவது மாடியில் சந்திரமுகியைக் கொண்டுவைத்து, அவ்விடம் விட்டு ஓரடி கீழிறங்கினால் தன் குமாரத்தியாயிருந்தபோதிலும் அவளை வெட்டிவிடவேண்டுமென்று திட்டம் செய்தார். வேலைக்காரிகளுள் முக்கியமாய்ச் செல்லமென்றொருத்தி உண்டு.

அவள், மண்டலேச்சுவரர், பட்டமஹிஷி, தூககுத்தூக்கி ஆகிய இந்த நால்வரும்தவிர வேறு ஒருவரும் அந்த மாளிகைப படிகளில் ஏறவாவது இறங்கவாவது கூடாதென்றும் தூககுத்தூக்கிமட்டில் நினைத்தவேளையில் போகலாம் என்றும் ஏற்பாடுசெயதார்.

"இபபடியெல்லாம் நடந்ததற்கு என்னகாரணம். ஒரு நாளில் மாளிகைகட்டி இவ்வாறு என்னைச் சிறையில் வைத்தாற்போல் வைத்தது ஏன்? பகலெல்லாம் தகபபனர் என்னைவிட்டுப் பிரியாமல் காத்து இரவு பத்து நாழிகைககே இவ்விடம் கொண்டுவந்து சிறைபபடுத்தினதையும், என்னை ஒருபடி இறங்கக்கணடால்கூடத தலையை வீசிவிடுமபடி போர்வீராகளுக்குக் கட்டளையிட்டதையும் யோசித்துபபார்ததால் நாம் ராமசநதிரனிடம் பேசின ஸங்கதி தெரிந்துவிட்டாற்போல் காண்கிறது; இல்லாவிடில் இவ்வளவு நிர்ப்பந்தம் இதுவரையில்லாமல் இன்றுமட்டில் விதித்தது எனனகாரணம்? நாம் ராமசந்திரனிடம் பேசும்பொழுது நாலுபக்கமும் பாாத்துத்தானே பேசினேம் 'பகல் பக்கம்பார், இராத்திரி அதுவும செய்யாதே' என்பது உண்மையாய்விட்டதே நலலது இந்த மூடத தாககுத்தூக்கிககு இவ்வளவு சுயேச்சை என்ன? அவன்மட்டில் நினைத்தவேளையில் ஏறியிறங்க உத்தரவாமே; ஒருகால் இவனே நம்மை வஞ்சித்தானே என்னவோ தெரியவில்லையே! ஆயினும் இவனைப பரீக்ஷிபபோம" என்று பலவாறு ராஜகுமாரத்தி யோசித்து மனம் குழம்பினவளாய் ஒன்றும் செய்யத் தோன்றமல் தூக்கமும் பிடிக்காமல் தூக்குத்தூக்கியைப் பரீக்ஷிக்க யோசித்தாள்.

அர்த்தராத்திரியாகியும் சந்திரமுகிக்குத் தூக்கம் என்பது வரவேயில்லை. தூக்குத்தூக்கி அவளுக்கு நேரிட்ட ஸஙகடத்துக்குத் தானும் தூக்கப்படுவதுபோலத் தலைதொங்கவிட்டு எதிரில் உட்காநதிருந்தான். சந்திரமுகி அவனைப் பரீக்ஷிக்க உத்தேசிதது "அடா தூக்குத்தூககி, அந்த அலமாரியிலிருக்கும் முதல்பாட புஸ்தகத்தை எடுத்துவநது பதினைராவது பக்கம் படி பார்ப்போம்" என்றள். அது கேட்டதும் அவன் ஏக்கம் பிடித்தவன்போல அவளைச சற்றுநேரம் உற்றுப்பார்த்துச் சரேல் என்று கிளம்பி, அலமாரியிலிருந்து புஸ்தகத்தை எடுதுப் படிப்பதற்குப பதிலாக அந்தப புஸ்தகத்தைத துண்டுதுண்டாய்க் கிழித்து அவற்றைத் தன் விரல்களில் இடுககிக்கொண்டு மோந்துபார்த்து ஹோ என்று அழத்தலைப்பட்டான். "ஒருபணம் கொடுதது அழச்சொன்னள், இரணடுபணம் கொடுத்து ஓயச்சொன்னள்" என்னும் பழமொழிப்படி சந்திரமுகிககு அவன் அழுகையை நிறுத்த அதிக வருத்தமுண்டாயிற்று. அழுகை ஓய்ந்ததும் நான் உன்னைப படிக்கச்சொன்னல் புஸ்தகத்தைக் கிழித்து இந்தமாதிரி அழுவதற்குக் காரணம் என்னவென்று சந்திரமுகி கேட்க, தூக்குத்தூக்கி பின் வருமாறு சொல்லததொடங்கினன்.

"சந்திரமுகி, நான் அநாதையாய் வந்ததுமுதல் என்னை அன்புடன் எடுத்து வளர்த்தது நீயே. எனககு ஒன்றும் குறைவில்லாமல் இதுவரையில் நடத்திவந்ததும் நீயே; நீயோ வெகு பணக்காரி. மண்டலேசசுவரன மகள். என் படிப்புக்காக ஒரு உபாததியாயனை நியமிக்கமாத்திரம் உனக்குச் சரிப்படாமல் போய்விட்டது! நல்லது அது போனல் போகட்டும், உன்னை ஸரஸ்வதி என்றல் தகும், அவ்வளவு படித்திருக்கிறய். என்விஷயத்தில் இவ்வளவு கவலைகொண்ட நீ தினம் ஒரு நாழிகையாவது எனக்குக் கொஞ்சம் சொல்லி வைக்கலாகாதா? அதுவுமில்லை எனக்கு எருமைச்

கடாப்போல் இருபதுவயதுக்குமேலாகிவிட்டது. படிப்புச் சிறிதும் இல்லாவிட்டாலும் வெட்கம் ஒன்று பாதிக்கிறதே. எனக்குப படிப்பு என்பதே தெரியாது என்று அறிந்திருககை, இவ்வளவு பெண்பிள்ளைகள் மத்தியில் முதல்பாட புஸ்தகத்தை எடுத்துப பதினேராவது பக்கம் புரட்டச்சொன்னயே. எனககு ஹரிஃ ஓம் கூட தெரியாது எனபதை நீ செம்மையாய் அறிவாயல்லவா? நீ என்னை அவமானப்படுத்தினபடியால் அந்தப் புஸ்தகத்தை நான் அபபடித் திண்டிதது அழுதேன். என் முட்டாள்தனத்துக்கெல்லாம் காரணம் நீயே" என்று சொல்லிமுடித்தான்.

இவன் உரப்பாய்ச் சொன்னதையெல்லாம் பாசாங்கு என்று எண்ணுமல் நிஜமென்று நம்பிய சந்திரமுகி இவன் அறிவீனனுய்த்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டாள் அன்றியும் இவ்வளவு பரமார்த்தன்பேரில் அவநம்பிக்கைபபட்டது தன்பேரிலும் ஒரு பெரிய தப்பாகவும் எண்ணி, மாடிப்படிகள் ஏறவும் இறஙகவும் அநுமதிகொடுக்கபபட்டிருக்கும் இவனுடைய உதவி தனக்கு இருப்பதறகாகத் தன் குலதெய்வங்களையெல்லாம் துதித்து இவனை ராமசநதிரனுககுக் கடிதம் கொண்டுபோய் வர உபயோகிக்க நினைத்தாள். நினைத்ததக்ஷணமே ஒரு காகிதம் எடுத்து அதில் தானிருக்கும் நிலைமையையும், நிஷ்காரணமாய்த் தன்னைத் தகபபனுர் சிறையிட்டதையும், ராமசந்திரன்பேரில் குறையா அன்பையும் எடுத்துககாட்டி, கடைசியாய் அவன் ஆண்பிள்ளையாயிருககும் பக்ஷத்தில் எந்த உபாயமாவது செய்து தன்னை அந்தச் சிறையிலிருநது நீக்கி வேறுதேசம் கொண்டுபோய் மணம்புரியவேணடுமென்றும், அவனே தனக்குக் கதி என்றும் எழுதி, பிரியபார்யை சந்திரமுகி என்று கையொப்பம்வைத்துக் கடிதத்தை ஒரு உறையில்போட்டு முத்திரைசெயது தூக்குத்தூக்கியிடம் கொடுத்தாள். கொடுத்துச் சொன்னதாவது: "மஹாராஜா நம்மை இப்படி இங்கே சிறையில் வைததிருக்கிருர். நீ இந்தக் கடிததைப் பகிரங்கமாய்க் கொண்டுபோகாதே. இதைப போர்வீரர்கள் பார்த்தால நமக்கு இந்த ஸ்திதிக்கும் ஹானிநேரிடும். இதை நீ வெகு ஜாக்கிரதையாய்க் கொண்டுபோகவேண்டும்" என்ருள். இவ்வளவு பயபபடத்தக்க ஸங்கதியை எனககுமாத்திரம் சொல்லக்கூடாதா" என்று தூக்குத்தூக்கி கேட்க, அதற்கு அவள்: "ஒன்றுமில்லை, ஒரு கேள்விககடுதாசி இதிலிருககிறது. காலபலம் எனக்கு இபபொழுது குறைவாகையால் உன்னை அவ்வளவுதூரம் எச்சரித்தேன். இப்பொழுது விடியப பத்து நாழிகைதானிருககும், தூங்கிவிட்டு அதிகாலையில் எழுந்து காகிதம்கொண்டுபோய்க கொடுத்து மறுவேலை பார்" என்று சொல்லிப படுக்கச்சென்ருள். தூக்குத்தூக்கியும சயனித்துக்கொண்டான்.

இப்பால் நமது ராமசந்திரனைபபற்றிச் சற்று விசாரிப்போம்: தகப்பனர் இராத்திரி நாலுநாழிகைவரையில் தண்ணீர்கூடப் பல்லில் இடாமல் மாளிகையைக் கட்டிவைத்துவிட்டு வீட்டுக்குவந்த ஸங்கதியைக் கேட்டு "குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கும்" என்றபடி, தன் தகப்பனுருக்குக்கூட இன்னருக்கு என்று தெரியாமலிருந்தபோதிலும், தான் யூகித்துக்கொண்டு சந்திரமுகிக்காகவேயிருக்கலாம் என்றும், தான் செய்தகாரியம் மஹாராஜனுக்கு எப்படியோ எட்டிவிட்டதென்றும் நிச்சயிதது மிகப் பயந்து பிராணனுக்கு நடுநடுங்கி ஸங்கதியைமட்டும் ஒருவரிடமும சொல்லாமல் பள்ளிக்கும் போகாமல் வீட்டினுள்ளேயே அடைத்துக்கிடந்தான். இந்த

ஸங்கதியை அவன் தகப்பனாரிடத்தில் சொல்லவேயில்லை. அது அவனிடத்தில் பெரிய புத்திசாலித்தனமே.

இப்படியிருக்கப் பொழுதுவிடிந்தது. விடிந்தவுடன் சந்திரமுகி தூக்குத்தூக்கியைக் கடிதத்தை எடுத்துக்கொண்டு ராமசந்திரனிடம்போகக் கட்டளையிட்டாள். தூக்குத்தூக்கியும் கடிதத்தை ஊந்து, ஆறு சின்ன சவுக்கங்களில் சுருட்டிக் கட்டினான். சந்திரமுகி இவன் செய்கையைப்பார்த்துச் சிரித்து, "போதும், கடிதத்தினுடைய பத்திரத்துக்கு இவ்வளவு முடிப்புகள் போதும், சீக்கிரம் எடுத்துப்போ" என்றாள். உடனே மூட்டையைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு தூக்குத்தூக்கி ராமசந்திரனிடம்போகப் புறப்பட்டான்.

இந்த கடிதத்தை அப்படியே மண்டலேச்சுவரனிடம் தூக்குத்தூக்கி கொண்டுபோய்க் கொடுப்பான் என்று இதைப் படிப்போர் எண்ணக்கூடியவிஷயமே. அப்படி அவன் செய்திருந்தால் கதை இவ்வளவோடு முடிந்துவிடும், ஆனால் தூக்குத்தூக்கியின் எண்ணங்கள் எல்லாம் வேறு. மண்டலேச்சுவரன் தன்னழகுநிமித்தம் சந்திரமுகியைத் தனக்குக் கொடுக்க உத்தேசித்திருப்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். சந்திரமுகியும் மற்ற ஜனங்களும் முழுமூடன் என்று தன்னைப்பற்றி அபிப்பிராயப்பட்டிருந்தபோதிலும் என்றைக்காவது ஒருதினத்தில் ராஜகுமாரத்தி தனக்குக் கிடைப்பாள் என்று அவன் எண்ணியிருந்தான். இப்படியெல்லாம் இருந்தும் ஒரு பெரிய இடையூறாக ராமசந்திரன் தலைப்படவே, அந்தச் சங்கதியை மஹாராஜனிடம் தெரியப்படுத்தி ராஜகுமாரத்தியைப் பத்திரப்படுத்தினாலொழிய அவள் தனக்கு வாய்க்கமாட்டாள் என்று யோசித்து, உடனே சக்கரவர்த்தியிடம் சொல்லி அவன் சந்திரமுகியைப் பத்திரப்படுத்தினானேயொழிய வேறில்லை. செய்தபடியே காரியமும் கைகூடினது. இப்பொழுது எந்த ராமசந்திரனும் சந்திரமுகியை அசைக்கக்கூடாது.

தூக்குத்தூக்கி கடிதத்துடன் கீழேயிறங்கி உடனே ஒரு கடைக்குப் போய்க் காகிதம் பேனா மைக்கூடு வாங்கிக்கொண்டு ஒருவரும் பாராத விடமான ஒரு காட்டுக்குப்போய், அவ்விடத்தில் சந்திரமுகியின் கடுதாசி உறையைத் திறந்து படித்துப்பார்த்தான். பார்த்து ராமசந்திரன் எழுதுவது போலச் சந்திரமுகிக்கு உத்தரம் எழுதத்தொடங்கினான். கிருஷ்ணசிங்கு எப்போதும் சந்திரமுகியுடன் கலாசாலையிலிருந்தபடியால் ராமசந்திரன் எழுத்துப்போல் எழுத நன்றாய்த்தெரியும். ராமசந்திரன் எழுத்துமாத்திரமல்ல, அவ்விடத்திலுள்ள ஒவ்வொருவருடைய எழுத்துப்போலவும் தூக்குத்தூக்கிக்கு எழுதத்தெரியும். இவன் மஹாபுத்திமான் என்பதும் எழுதப்படிக்கச் செவ்வையாய் அறிந்தவன் என்பதும் முன்னமே சொல்லியிருக்கிறோம். ராமசந்திரன் எழுதுவதுபோல தூக்குத்தூக்கி எழுதியதாவது:—

"எனது பிரியபத்தினியே!

நீ கருணைகூர்ந்து எழுதிய கடிதத்தைக்கண்டு கண்குளிர்ந்தேன். உன் கடிதம் வருமுன்னமே என் தகப்பனார் மாளிகையைப்பற்றிச் சொல்லும்போது உனக்காகத்தான் இருக்குமென்று ஊகித்துக்கொண்டேன். தேர்முட்டியில் நம்மிருவருக்கும் நடந்த ஸம்பாஷணை காற்றுமூலமாய் ராஜாவுக்கு எட்டியிருக்கவேண்டும்; ஆனால் இவைகளுக்கெல்லாம் நான் பின்வாங்குகிறவனல்ல. பதினாலாவது மாடியில்தான் கொண்டுபோய்வைக்கட்டுமே, நான் எப்படியாவது உன்னை இன்று ஆறாம்நாள் இரவு கொண

டுபோய்விடுகிறேன். நீமட்டும் இவன்மூலமாய் எனக்கு ஆகவேண்டியது கொடுத்தனுப்பிவா. மடையனானாலும் இவன் உதவிதான் நமக்கு வெகு முக்கியம். ஆகையால் இவன் நமக்குக கிடைத்திருபபதற்காக நமது குலதெய்வங்களைப் பிரார்த்திக்கவேண்டும். இவன்மூலமாய் லக்ஷம்வராகன் அனுபபு: காரணம் பின்னால் எழுதுகிறேன்.

உன்தன் பிராணநாதன,

ராமசந்திரன்."

முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் சாமர்த்தியமுள்ள தூக் குத்தூக்கி இந்தமாதிரி கடிதத்தைக் கொஞ்சமேனும் பயமில்லாமல் ராமசநதிரன் கையெழுத்துபபோல் எழுதி, முன்போலவே உறைக் குள் போட்டு முத்திரையிட்டு, சவுக்கங்களில் கட்டி முடிச்சிட்டுக் கககத் தில் எடுத்துக்கொண்டு வெகுவேகமாய்ச் சந்திரமுகியண்டை வந்தான். அவளைக் கண்டதும் புன்சிரிபபுடன் "எஜமான் நீ அனுபபிய காகிதத்தை எத்தனைதரம் முத்தமிட்டார், கேள்விக்கடிதம் பாதி தேய்ந்துபோயிருகக லாம் என்று தோனறுகின்றது" என்று சொல்லிக்கொண்டே சநதிரமுகிக்கு ஆவலையுண்டாக்கினனேயல்லாமல் கடிதததைக் கொஞ்சமேனும் கொடுக்க வேயில்லை. அப்புறம் அவள் வருந்திக்கேட்டதின்பேரில் "இதோ" என்று முடிச்சை ஒவ்வொன்றாய் அவிழ்த்துக்கொடுத்தான். கடிதத்தைப பார்த்த வுடன் ராமசந்திரன் செய்தது பொய்யும் சந்திரமுகி செய்தது மெய்யுமாய் விட்டது. ஆயிரம்தடவை முத்தமிட்டுக்கொண்டாள் என்றாலும் அவள் வாஸ்தவமாய்ச் செய்ததற்கு நூற்றிலொரு பங்குகூட ஆகாது. இநத மாதிரி யாகக் கடிதத்தைக் கண்டு களித்து அச்செய்தியை ஒருவரிடமும் சொல்லா மலிருக்கத தூககுத்தூக்கியைப் பிரார்த்தித்தாள். "எஜமானரும இந்தமாதிரி வீணாகவே என்னிடம் அவநம்பிக்கைப் படுகிறார். நீயும் அப்படியே அவநம்பிகைகைப் படுகிறாய்; நான் என்ன அவ்வளவு மூடனா" எனறான். சந்திரமுகி நாம் ஏதாவது சொன்னால் இவன் கோபிககிறான். இவன் மனது கோணினால் நமக்குக் காரியம் கோணிப்போமாகையால் நாம் இவனிடத்தில் நம்பிகைகையின்பேரில் வேலை வாங்கவேண்டுமென்று நிச்சயித்து, அதுமுதல் எல்லாம் நம்பிக்கையின்பேரிலேயே விட்டுவிட்டாள். பிறகு தூக்குத்தூக்கி யைத் தன் கஜானாவுககு அழைத்துப்போய் "இதிலிருந்து உன்னால் எவ்வளவு பணம் கொண்டுபோய எஜமானனிடததில் கொடுக்கலாமோ அவ்வளவு கொண்டுபோகவேண்டும்" என்று சொன்னான். தனக்காகவே எல்லாம் செய்வதாகையால் அரைக்கணத்தில் லக்ஷம்வரானுக்குமேலேயே தூக்குத் தூக்கி அவ்விடமிருந்து கீழே கொண்டுபோய், தான் வழக்கமாய்ப் பணி யாரம் வாங்கித்தின்னும் ஒரு கிழ அம்மையார்வீட்டில் அறை ஒன்று குடிக் கூலிக்கு வாங்கி அவ்விடம பணத்தை வைத்துப் பூட்டினான். பிறகு மாறு வேஷம் பூண்டு குதிரைவிற்கும் அரபிபோல் உடுபபுமாற்றிக்கொணடு அந்தப் பட்டணத்தில் குதிரைவிற்கிற இடமெல்லாம்போய்க் குதிரைகளைத் தேடிக்கொண்டிருந்தான். இவன் செய்கிற பரீக்ஷையானது அங்கு இருந்த தேர்ந்த குதிரைவியாபாரிகள் எல்லாரும் ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது. கடைசியாய் இரண்டு நல்ல குதிரைகள் 50,000 வராகனுக்கு வாங்கினான். உச்சைசிரவம் என்றால் அந்த அசுவரத்தினங்களுக்கே தகும். 20,000 வரா கன் அவைகளுக்கு சேணம் அலங்காரம் முதலியவைகளில் செலவுசெய்து நாலு ஐந்து நாளைககாக இரண்டு பறையர் குதிரைக்காரர்களையும் திட்டம்

செய்தான். மீதிப்பணத்துக்கு ஒரு நல்ல நூலேணியும் வாள் ஒன்றும் வாங்கிக்கொண்டு பிறகு சந்திரமுகிக்கு ராமசந்திரன் எழுதுவதுபோல எழுதியதாவது:—

"எனது பிரியபத்தினி!

தூக்குத்தூக்கி என்ன மூட்டாள் என்று நீ சொன்னாலும் நான்மாத்திரம் சந்தேகிக்கவேண்டியதாயிருக்கிறது. அவ்வளவு கட்டுக்காவல்களை எல்லாம் கடந்து எப்படியோ பணத்தைப் பத்திரமாய்க் கொண்டுவந்துவிட்டான். நல்ல குதிரைகள் வாயுவேக மனோவேகமாய் ஓடப்பட்டவைகள் இரண்டு நான் வாங்கியிருக்கிறேன்; அவைகளுக்காக வராகன 50,000 கொடுத்தேன். நீ பார்க்கும்படி உன்னுடைய ஏழாம் மாடி பெரியஜன்னலுக்கு நேர்கீழே ராஜவீதியில் ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் கட்டிவைக்கிறேன். தூக்குத்தூக்கியிடம் ஒரு அற்புதமான வாளும் நூலேணியும அனுப்பியிருக்கிறேன்; இந்த வாள் வெகு அனுகூலமானது. அதிக கடினமான இரும்பையும் நொடிப்பொழுதில் அறுக்கும், இதற்குமட்டும் 25,000 வராகன் கொடுத்தேன். ஞாயிற்றுக்கிழமை இரவு பத்துநாழிகைக்குமேல் எழுந்து எல்லாரும் குறட்டைவிட்டுத் தூங்கும் சமயம்பார்த்து பெரியஜன்னலை இந்த வாளால் ஒரு நொடிப்பொழுதில் அறுத்து அங்கிருந்து நூலேணியை விசிறினாயானால் அதை நான் கீழேயிருந்து பற்றிக்கொள்ளுகிறேன். நீ சுகமாய்ப் பயப்படாமல் இறங்கிவா; நாமிருவரும் ஓடிப்போகலாம். ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தி இதே தூக்குத்தூக்கியிடம் எவ்வளவுபணம் அனுப்பக்கூடுமோ அவ்வளவும் அனுப்பு.

அன்புள்ள உன்தன,

**ராமசந்திரன்.**"

என்றிவ்வாறு கடிதத்தை எழுதி முத்திரையிட்டுச் சவுக்கத்தில் கட்டி முடிந்து மற்றொரு சவுக்கத்தில் நூலேணியையும் வாளையும் சுருட்டி எடுத்துக்கொண்டு நிமிஷந்தோறும் சிரித்தவண்ணம் சந்திரமுகியிடம் தூக்குத்தூக்கி வந்துசேர்ந்தான். தூரவரும்பொழுதே இவன் சிரிப்பைக்கண்டு சந்திரமுகி நடுநடுங்கிக் கைச்சாடையாலும் கண்சாடையாலும் முகச்செய்கையாலும் எச்சரித்துப் பார்த்தாள். இவன் கேட்கிறதாகத் தோற்றவில்லை. ஏனெனில் சமீபத்தில் கவனிக்கப்பட்டவர்கள் ஒருவரும் இல்லை என்பது தூக்குத்தூக்கிக்கு நன்றாய்த் தெரியும். கிட்டவந்தவுடன் சந்திரமுகி "மூடா, இனி இந்தமாதிரி சிரியாதே" என, அவன் "நான் என்னசெய்யட்டும் குதிரைகள் அவ்வளவு அழகாய் இருக்கின்றனவே" என்றான். "என்ன குதிரைகள்" என்று சந்திரமுகி வினவ, "நம்ம எஜமான் இப்பொழுது வாங்கியிருக்கும் குதிரைகளின் கால்விலைபெறாது மற்றெல்லாக் குதிரைகளும்" என்று சொல்லிக்கொண்டே நூலேணி வாள் இருக்கும் மூட்டையைச் சந்திரமுகி முன்னே வைத்தான். அவள் மூட்டையை அவிழ்த்து நூலேணியையும் வாளையும் கண்டு திடுக்கிட்டு மேஜை அறையில் ஒளித்துவைத்துக் கடிதத்தைக் கேட்க, அதைக் கொடாமலே குதிரையையே வாணிக்கத் தலைப்பட்டான். சந்திரமுகிக்குக் கோபம்வந்து "இனி வாயைத்திறவாதே, கடிதத்தைக் கொடு" என்றாள். அவ்வளவு ஆவல் உண்டாக்கிய பிறகு முடிச்சுக்களை அவிழ்த்துக் கடிதத்தைத் தூக்குத்தூக்கி கொடுத்தான் கடிதத்தைப் பார்த்துக் கண்குளிர்ந்து தன்னுடைய பாக்கியமே பாக்கியமென்றும் இவ்வளவுகாலத்துக்குள் இவ்வளவு ஏற்பாடுசெய்த ராமசந்திரன் சாதாரணனல்ல

வென்றும், ஓடிப்போவதற்கு வாள் துலேணிகள் தன்னிடத்திலும் குதிரை
கள் ராமசந்திரன்வசத்திலும் இருப்பதால் எல்லாம் சித்தமாய் இருப்பதாகவும்,
ஓடிப்போய் அன்னியதேசத்தில் சுகமாய்க் காலங்கழிக்கப் பணம்மட்டும்
தேவை என்றும் நினைத்து, உடனே தூக்குத்தூக்கியைத் தன் கஜானாவுக்கு
அழைத்துப்போய் அங்கிருந்து எவ்வளவு அவளால் கொண்டுபோகலாமோ
அவ்வளவும் ராமசந்திரனிடம் சேர்க்கச்சொன்னதுமல்லாமல், முழுமையும்
கொண்டுபோய்ச் சேர்த்தாலும் தனக்குச் சம்மதம்தான் என்றும் சொன்னாள்.
தனக்கு இரண்டு சந்தேகம் தீர்த்தால் ஒழிய ஒன்றும் செய்யமாட்டேனென்று
தூக்குத்தூக்கி கூறியதற்கு, அவை யாவை என்று சந்திரமுகி கேட்க,
தூக்குத்தூக்கி "குதிரைகள் எதுக்கு? இரண்டாவது, கஜானாவை ஏன்
இப்படி சூனியமாக்கவேண்டும்" என்று கேட்டான். அதற்குச் சந்திரமுகி
ஸமீபத்தில் ஒரு காளிகோவிலிருப்பதாகவும் அவ்விடம் போவதற்குக் குதிரை
கள் என்றும், அந்தக் காட்டுதெய்வத்துக்குப் பூசையிடச் செலவுக்காகப்
பணம் என்றும் அவன் இரண்டு கேள்விகளுக்கும் மறுமொழிசொன்னாள்.
அவ்விடத்திற்குத் தன்னையும் அழைத்துப்போக வேண்டுமெனத் தூக்குத்
தூக்கி கேட்க, சந்திரமுகி, மூன்றுபேராய்ப் போகக்கூடாதாகையால் அவ்
விடத்தில் நைவேத்தியம் செய்கிற எல்லாப் பதார்த்தங்களும் விசேஷமாய்க்
கொண்டுவந்து கொடுப்பதாகச் சொன்னாள். அதுகேட்டு மனம் சகிந்த
வன்போல் காண்பித்துக் கஜானாவிலிருந்து பணங்களையெல்லாம் கீழே
கொண்டுபோய் உண்டிகளாக மாற்றிச் சேணங்களிலேயே லேசாய் மறைத்து
விட்டான்.

பிரயாணத்துக்கு எல்லாம் சித்தமாய்விட்டன. ஸவாரிக்குக் குதிரை
களும், அன்னியதேசத்தில் செலவிடப் பணமும், இந்த ஸங்கதிகளைக்
குறித்து ராஜகுமாரத்திக்கு முந்தியே எச்சரிப்பும் எல்லாம் சித்தமாய்விட்டன.
தன்னுடைய நண்பனான ராமசந்திரனே எல்லாம் செய்வதாகச் சந்திரமுகி
எண்ணி எண்ணி மனம் பூரித்துக்கொண்டிருந்தாள். இந்த ஸங்கதிகளில்
சிறிதேனும் அவனுக்குத் தெரியுமா? ஐயோ அவன் ஒரு பாவமும் அறியாமல்
தின்பதும் உறங்குவதுமாக மஹாராஜனிடத்திலிருந்து தன் தகப்பனாரான
மந்திரிக்குக் கடிதம் வரும்பொழுதெல்லாம் தன் தலைக்கு எங்கு ஆபத்து
வருகிறதோ என்று பயந்தவனாய் வீட்டைவிட்டு வெளியே புறப்படாமல்
பதுங்கிக்கொண்டிருந்தான். நல்லது மண்டலேச்சுவரனுக்குத்தான் ஏதாவது
தெரியுமா? தன் குமாரத்தியின் ஸம்ரக்ஷணைக்காக ஒரு பகலில் கட்டி
முடித்த மாளிகைகளுக்குள்ளேயே இப்படி நடக்கும் அநியாயம் சக்ராதிபதி
அறிவாரா? ஒன்றுமறியமாட்டார். எல்லாம் ஸரியாய் இருக்கிறதென்
றெண்ணி அவரும் நிர்விசாரமாயிருந்தார். ஆனால் யாருக்குத்தான் விசாரம்?
சந்திரமுகிக்குமட்டுமே. ஒரு நிமிஷம் ஒரு வருஷமாய் அவளுக்குத் தோன்
றிற்று. நிமிஷ நிமிஷமாய் எண்ணிவந்து ஞாயிற்றுக்கிழமை வந்தவுடன்
தன் ஜன்மம் அன்றுதான் ஸபலமானதாக நினைத்தாள். அன்று தான்
போகும்முன் நல்ல ஆடை ஆபரணங்களைக் கொண்டுபோக உத்தேசித்து
அப்பொழுது தூக்குத்தூக்கியிருந்தால் ஸந்தேகிப்பான் என்றாலோசித்து
அவனை எப்படியாவது வேலையிட்டுத் தாங்களிருவரும் ஓடிப்போவதை
அறியாமலிருக்கும்படி செய்யவேண்டும் என்று ராமசந்திரனுக்கு ஒரு கடிதம்
எழுதிக்கொடுத்துத் தூக்குத்தூக்கியை அங்கு போகும்படி அனுப்பிவிட்
டாள். ஈச்வர ஸங்கற்பத்தால் என்னை எப்படியாவது போகும்படி செய்

தானே மஹாராஜி என்று மனதில் ஸந்தோஷமிருந்தபோதிலும் வெளியில் போவதற்கு மனம்வராதவன்போல் கொஞ்சநேரம் காட்டி, சந்திரமுகி கண்டிப்பாய்ச் சொல்லவே, கடிதத்தை எடுத்துக்கொண்டு தூக்குத்தூக்கி கீழே இறங்கினான். "இன்றுமட்டும் நம்மை வெளியிலனுப்பாவிட்டால் நாம் செய்தகாரியங்கள் எல்லாம் வியர்த்தமாகவல்லவோ முடிந்திருக்கும். நம்மை அனுப்பினாளோ, பிழைத்தோமோ" என்று எண்ணிக்கொண்டே அவன் கீழே இறங்கிக் கடிதத்தைப் படித்துப்பார்த்துக் கிழித்தெறிந்துவிட்டு அன்று பகலெல்லாம் நெடுந்தூர பிரயாணத்துக்காகக் குதிரைகளைச் சித்தஞ்செய்து தானும் ஸித்தமானவனாய், ஸாயங்காலமானவுடன் குதிரைக்காரர்களுக்குக் கூலியும் வெகுமதியும் கொடுத்தனுப்பிவிட்டுத் தானே குதிரைக்காரன் வேஷம்பூண்டு கீழண்டை ராஜவீதியில் சந்திரமுகி மாளிகை பெரியஜன்னலுக்கெதிரே ஒரு பூவரசமரத்தில் குதிரைகளைக் கட்டி அவைகளின்கீழே தானும் இளைப்பாறப் படுத்தான். படுத்ததுதான் தெரியும்; கும்பகர்ணன்போலக் குறட்டைவிட்டுத் தூங்க ஆரம்பித்தான். ஒரு வாரமாக ஆகாரம் நித்திரை செவ்வையாய் இல்லாதபடியால் களைத்து அந்த மாதிரி அயர்ந்து போக நேரிட்டது. சந்திரமுகி தன் ஆடை ஆபரணங்களையெல்லாம் ஒரு சின்னப் பையிலும் பெட்டியிலும் எடுத்துக்கட்டிவிட்டு வேண்டுமென்ற ஆபரணங்களைத் தன்மேல் அணிந்துகொண்டு ஸாயங்காலமானவுடன் ஜன்னல்வழியே குதிரைகளைப் பார்த்து மனங்களித்து இராத்திரி பத்துநாழிகையாகப் பார்த்திருந்தாள்.

இது இப்படியிருக்க தாராபுரத்து ஏகசக்கராதிபதி ஏதோ ஒரு காரணத்தால் அப்புக்காத்தான் என்னும் ஒரு பெரிய கள்ளத்தலைவனை ஒரு ஸமயத்தில் விரோதித்துக்கொண்டிருந்தார். அப்புக்காத்தான் அவரைச் சிக்ஷை பண்ண நினைத்து அன்று ஞாயிற்றுக்கிழமை இரவு அந்த ஊரைத் தன் கூட்டாளிகளைக்கொண்டு கொள்ளையிட உத்தேசித்து, அந்த ஊர் அறுபத்து நான்கு தெருக்களுக்கும் அறுபத்துநான்கு கள்ளத்தலைவர்களையும் ஒவ்வொரு தலைவனுக்கு இருபது முப்பது கள்ளர்களையும் அனுப்பி ஒவ்வொரு வீட்டிலும் அணுவளவும் விடாமல் கொள்ளையடிக்கக் கட்டளையிட்டிருந்தான். அப்புக்காத்தான் உத்தரவுப்படியே அன்று கீழண்டை ராஜவீதிக்கும் ஒரு கள்ளத்தலைவனும் இருபது கள்ளர்களும் போனார்கள். அவ்விடத்தில் பூவரச மரத்தில் கட்டப்பட்டிருந்த இரண்டு குதிரைகளையும் அவைகள்மேலிருந்த விலையுயர்ந்த சேணங்கள் அலங்காரங்களையும் கண்டு, இவைகளின்பேரில் ஏறப்பட்டவர்கள் லக்ஷாதிபதிகளாகவேயிருக்கவேண்டுமாகையால் அவர்களைக் கொள்ளையிட்டுக் குதிரைகளையும் சொத்தையும் கொண்டுவர ஒரு கள்ளனை அவ்விடம் உட்காரவைத்துப் போனான். ஒரு குதிரையைக் கையில் அவிழ்த்துப் பிடித்துக்கொண்டு பிரபு வரும் ஸமயம் எதிர்பார்த்தவனாக அக்கள்ளன் அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

பொழுதுபோய்ப் பத்துநாழிகை ஆய்விட்டது. ராஜகுமாரத்தி காலையிலேயே பிரயாணத்துக்கு ஸன்னத்தமாய்விட்டாள். இராத்திரி பத்துநாழிகைக்கெல்லாம் எல்லாரையும் நித்திரைசோதித்தாள். ஒவ்வொருவரும் மெய்மறந்து தூங்கக்கண்டு ஈசுவரன்கூடத் தன் மனதுக்கு ஒத்திருப்பதாய் நிச்சயித்துக் குலதெய்வங்களையெல்லாம் மனதில் தியானித்து வாளையெடுத்து சன்னலில் வைத்தாள், சன்னல் இரண்டுதுண்டாய்விட்டது. அங்கிருந்து நூலேணியை விசிறினாள்; குதிரை கால்முளையில் அந்த நூலேணி தற்செயலாய் வந்து

மாட்டிககொண்டது. இழுத்துபபார்த்துக் கெட்டியாயிருக்கக்கண்டு ராமசந்திரனே பிடித்திருப்பதாய் மனங்களித்துப் பெட்டியையும் மூட்டையையும் ஒரு கையில் எடுத்துக்கொண்டு இறங்க ஆரம்பித்தாள். ஆபரணங்கள் அக்கிபோல் ஜ்வலிக்கிறதும் நிசிவேளையில் அவள் இறங்குவதும் திருடன் மனதில் சுறுக்கென்றது. "ஆகா இறங்கும் உருவம ஒரு பெணபோல் காணப்படுகிறது. நிசிவேளையில் ஸ்திரீகள் இறஙகுவாாகளா? இவ்வளவு உயரத்திலிருநது எபபடித்தான் இறங்க மனதுவரும; இது ஏதோ பேயோ பிசாசோ தெரியவிலலை, நம்மையே நோக்கிவருவதைப் பாாத்தால் நம்மைத்தான் இன்று தீனிக்கு லக்ஷியம்வைத்திருககிறதோ என்னவோ தெரியவில்லை என்று கள்ளன் ஆலோசிககலானான். ஆலோசிக்குமபொழுதே, சந்திரமுகி வெகு ஸமீபதில் வந்துவிட்டாள். வெகு ஸமீபம் வரக் காணவே, இனி நாமிருநதால் பராணுபாயந்தான் என்று யோசித்து மற்றொருகுதிரை எபபடியாவது போகட்டுமென்றெண்ணி அந்தக குதிரையின்மேலேறித தெற்குமுகமாய்த் திருமபி ஓட ஆரம்பித்தான். திருடன ஓடினதைச் சந்திரமுகி பாாத்து ராமசந்திரன்தான் ஒருகால் நாமிருவரும் ஸந்திக்கும்பொழுது எதாவது பேச நேரிடும்; அபபடி பேசுங்கால் யாராவது கணடுபிடித்துக்கொண்டால் என்னசெய்கிறது என்று ஓடினாற்போல தோற்றுகிறது என்று எண்ணிக்கொண்டே கீழே இறங்கி மற்றொரு குதிரையை அவிழ்த்து ஏறிக்கொண்டு சீக்கிரமாய் முன்பு ஓடும் குதிரையைப் பிடிக்கத் தானும் தன் குதிரையைத் துரத்தினாள்.

சந்திரமுகி கொஞ்சம் திரும்பிப்போனதும் தாதி செல்லம் விழித்துக்கொண்டு பக்கத்தில் படுத்திருந்த ராஜகுமாரத்தியைக் காணாமல் கூச்சலிடாமலே அவளை மாடிமுடியத் தேடினாள்; அவள் எங்குமில்லை, ஜன்னலும் அறுத்திருந்தது. அதுகண்டு திடுக்கிட்டு நாமினி இங்கிருந்தால் மண்டலேச்சுவரன் கோபத்துக்கு இரையாகவேணடுமேயல்லாமல் வேறில்லை. சந்திரமுகி போனவழி நாமும்போய் மஹாராஜன் கோபத்துக்குத தப்பித்துக்கொள்வதுடன், கூடுமானால் சந்திரமுகியையும் தேடிபபார்ப்போம் என்று யோசித்து, வாளைக் கையில் எடுத்துக்கொண்டே நூலேணியில் இறங்கி, இரவு முழுதுமாவது தாஙகளிருவரும் போய்விட்டதை ஒருவரும் அறியாதிருககாமலிருக்கட்டுமென்று, ஜன்னலைச் சரியேவைத்துக கீழே இறங்கினாள். நூலேணியைக்கூடத் தான் ஓடும்பொழுது ராஜகுமாரத்தி மறந்துவிட்டபடியால் செலலம் தபபித்துக்கொள்ள அது ஒருவழியாகவிருந்தது. மற்றவர்களும் அதை அறுஸரிக்காமலிருக்கும்படி செல்லம் நூலேணியைத் துண்டுதுண்டாய் அறுத்துவிட்டு ரம்பத்தை முறித்து ஒரு கிணற்றில் போட்டுக குதிரைகள் போன சுவட்டைப் பார்த்துக்கொணடே குடல்தெறிக்க ஓடினாள். இவளும் ஓட ஆரம்பித்தபிறகுதான் தூக்குத்தூக்கி நித்திரைதெளிநது கண் விழித்துப்பார்த்தான். குதிரைகளைக் காணோம். யாரோ பெண்பிள்ளைகள் வந்துபோனது இவனுக்குக் கனவு கண்டாற்போல் தோன்றிற்று. எல்லாவற்றுக்கும் தைரியலக்ஷ்மியைக் கைவிடாமல் அவன் பின்வருமாறு தேற்றிககொள்ளலானான்.

"தெய்வத்தின் கதி விசித்திரம் என்பது ஸத்யமே. எனக்கும் கொஞ்சம் நல்லகாலமிருநதபடியால் ஆண்டவர் இப்படி நித்திரையை அனுப்பினார். நான்மட்டும் விழித்துக்கொண்டிருந்திருபபேனேயானால் என் காரியங்கள் எல்லாம் வியர்த்தமாய்ப் போயிருககும்; சந்திரமுகி கீழே இறங்கினவுடன் என்னசெய்தியென்று என்னைக்கண்டு கேட்பாளாயின், நான்தான் இந்த

இப்பட்டணத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற பஞ்சாலேகளுக்குள் நீங்கள் எப்பொழுதாயினும் போய்ப் பார்த்திருப்பீர்களா? பார்த்திருந்தால் பல்லாயிரம் நூற்கதிர்கள் நாம் இவ்வளவென்று மனதிலும் நினைக்கக்கூடாத அவ்வளவு வேகத்துடன் பருத்திகளை ஒரே அளவான மெல்லிய நூலிழைகளாக நூற்றுக்கொண்டு சுழல்வதைக் கண்டிருக்கலாம். அவ்வண்ணமே துணிநெய்கிறவன் தான் ஒரு வேலேயும் செய்யாமல் தூர நின்று கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கையில், தாமே எல்லா வேலேகளையும் தெரிந்துகொண்டதுபோல நூலிழைகள் ஒழுங்குதப்பாமல் குறுக்கும் நெடுக்குமாய் ஓட, அநேகம் தறிகள் தாமே ஆடி வெகுவேகமாய்த் துணிநெய்துகொண்டிருப்பதையும் கண்டிருக்கலாம்.

மேலும் அந்தக் கட்டடத்திலுள்ள எல்லா யந்திரங்களையும் அதற்குத் தகுந்தபடி ஆட்டிக்கொண்டு ஒரு பெரிய பூதம்போல வெகு கெம்பீரமாய் மெதுவாகச் சுழல்கின்ற மிகப் பெரிதான சக்கரத்தையும் பார்த்திருக்கலாமே. இவற்றையெல்லாம் செய்திருப்பதெது? இந்த நுட்பங்களையெல்லாம் கண்டுபிடித்து இவ்வளவு அற்புதமாய் அந்த யந்திரங்களை நிருமித்ததெது? யாரோ சிலருடைய நிதானமான ஆலோசனையேயன்றி வேறல்ல. முதல்தடவை பார்க்கும்போதே இவ்வளவு புதுமைகளையும் அவர்கள் கண்டுபிடித்தார்களோ? இல்லே; நெடுநாள் நிதானமாய் யோசித்து யோசித்துக் கடைசியில் இவற்றைச் செய்யும்படியான வழிகளைக் கண்டுபிடித்தனர்.

மேற்கில் புதிய கண்டமொன்றிருக்கிறதென்பதைக் கொலம்பசுக்குக் கற்பித்துக்கொடுத்தது நிதானமான யோசனையைவிட வேறென்ன? நீராவிப்படகு உண்டாக்கும்படி புல்தன் என்பவனுக்குக் கற்பித்துக்கொடுத்தது நிதானமான யோசனையைவிட வேறென்ன?

வாஷிங்தன் என்பவர் தன்வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட மிகவும் முக்கியமான காரியங்களாகிய சண்டையையும் சமாதானத்தையும் சரியாக நடத்தும்படியானது எதனுல்? நிதானமான யோசனையினுலேதான். போர்க்களத்தில் பகைவர்களை வென்று உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் பிரான்சுதேசத்தைச் சிறந்ததாக்க வேண்டுமென்று நெப்போலியன் நினேத்தது எதனுல்? நிதானமான யோசனையினுலேதான்.

நிதானமான யோசனையில்லாமல் பெரியகாரியங்கள் எதுவும் இதுவரையில் சாதிக்கப்பட்டதுமில்லே; இனிமேலும் சாதிக்கப்படவுமாட்டாது. நாம் புத்திமான்களாயும் யோக்கியர்களாயும் ஆவது நிதானமான யோசனையினுலேதான். இதற்காகவே கடவுள் நமக்கு யோசிக்கும்படியான திறமையை அளித்திருக்கிருர். நம் மனதில் நல்லயோசனைகள் குடிகொள்ளும்படி நாம் எவ்வளவுக்கெவ்வளவு பாடுபடுகிறேமோ, அவ்வளவுக்கவ்வளவு உண்மையுள்ளவர்களா

யும், பெருமைபெற்றவர்களாயும், சவுக்கியமுள்ளவர்களாயும் ஆகிறோம்.

கடவுளுடைய குணாதிசயங்களையும் அவர் சிருஷ்டித்த இப்பிரபஞ்சத்திலுள்ள பலவகைப் புதுமைகளையும் கண்டுகொள்ளவும், அவர்க்கும் நமக்கும் இருக்கின்ற சம்பந்தத்தையும், நாம் அவர்க்கு அடிமைப்படவேண்டிய விதங்களையும் தெரிந்துகொள்ளவுங்கூட நிதானமான யோசனையேவேண்டும்.

சிலநாளைக்குமுன்னே சிறுபெண் ஒருத்தியிருந்தாள். அவள் ஒருநாள் தன் சகோதரியுடன் சண்டைபோட்டுச சொல்லக்கூடாத கெட்டவார்த்தைகளையெல்லாம் சொல்லிவிட்டுப பிறகு தனிப்புறமாக மாலைப்பொழுதில் வெகு அழகாய் நிலவுகாயும் ஓரிடத்திலே போய் உட்காந்துகொண்டிருந்தாள். உட்காந்து மாசுமறுவற்ற வானத்தில் பல்லாயிரம் நக்ஷத்திரங்கள் தட்டுத்தடையின்றி ஒரேமுறையாகத் தோன்றுவதையும அவற்றினிடையே சந்திரன் வெகு கம்பீரமாய் உதயமாகி உலகத்திலுள்ள இருள்களையெல்லாம் போக்கிககொண்டு ராஜாபோல மிகவும் மேன்மையாகப் பிரகாசிப்பதையும் பார்த்தாள். அவைகளை நிதானமாய் யோசித்துப் பார்க்கப் பார்க்க அவற்றைப் படைத்தவனுடைய வல்லமையும் அவனுக்கு ஜீவகோடிகளிடத்திலுள்ள காருணியமும் இத்தன்மையனவென அவளுக்குப் புலப்படலாயின.

அவைகளைப்பற்றி ஆழ்ந்து ஆலோசிக்கும்போது கடைசியில், இந்தப் பிரபஞ்சங்களையெல்லாம் படைத்த பரமபுருஷன், இவ்வுலகத்திலுள்ளவர் அனைவரும் யோக்கியர்களாயும், சவுக்கியமுள்ளவர்களாயுமிருக்கவேண்டுமெனச் சங்கற்பித்திருக்கிறார் என்ற எண்ணம் அவள் மனதில் உண்டாயிற்று. உண்டாகவே, ஆ! நாம் ஒருவர்க்கு ஒருவா சண்டைபோட்டு ஈசுவர சிருஷ்டியின் ஒழுங்கை அழிககவா வந்து பிறந்தோம்! நான் ஒருத்தி இல்லாவிட்டால் இவ்வுலகமெல்லாம் ஒற்றுமையாகவே இருக்குமென்றெண்ணித் தன் பேதைமையைப்பற்றி தானே நிந்தித்துக்கொண்டாள்.

இவ்விதமான எண்ணம் மனதில் உதித்தவுடனே அவள் வீட்டுக்குள் சென்று தன் சகோதரியைக் கண்டு, பெண்ணே, தெரியாமையால் நான் உன்னைத் திட்டினதைப்பற்றி எனக்கு இப்போது மிகவும் மனவருத்தம் உண்டாகின்றது. நீ மனம் பொறுத்து பண்ணி என் குற்றத்தை மன்னித்து என்னோடுகூட வா; எவ்வளவு அழகாய் நிலவு காய்கின்றது வந்துபார்! நாமெல்லாரும் பார்த்து மனங் களிக்கும்படி கடவுள் எவ்வளவு விசித்திரமாய் இவைகளைப் படைத்திருக்கிறார்! என்று சொல்லி அவளை வெளியே அழைத்துக்கொண்டுபோய் அவளுடன் கூடிக் களிக்கலானாள்.

ஆகலின் நிதானித்து யோசிப்பதானது, ஒருவரையொருவர் நாம் நேசித்திருப்பது நமது கடமையென்பதை மாத்திரமேயன்றி

யாவர்க்கும் மிகவும் சவுக்கியமானது என்பதையும், பொய்யைப் பார்க்கிலும் மெய் மிகவும் சிறந்ததென்பதையும், நாம் நன்மை செய்யப்போய் அதனால் ஒருவேளை ஏதாவது துன்பம் நேரிட்டாலும் அது தீமைசெய்வதனால் விளையும் துன்பத்திற்குச் சிறிதும் ஈடாகாதென்பதையும் நமக்கு நன்றாக விளக்கிக்காட்டுகின்றது.

## சீனதேசத்தார் செய்யும் மரியாதைகள்.

இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர்க்கு உரியதான ஒவ்வொரு மரியாதையுடையவர்களாய் இருக்கின்றனர். சில ஜாதியார் அந்த மரியாதைகளை ஒரு நியமம்போல ஏற்பாடுசெய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி வந்த வழக்கங்களும் நியாயங்களும் இப்போது அநேகமாய்ப் பழமொழிகளாக வழங்குகின்றன. ஆயினும் சில மரியாதைகளை யோசித்துப் பார்க்கையில் அவற்றின் மூலம் இன்னதென்று தெளிவாய்ப் புலப்படவில்லை. திருஷ்டாந்தமாய், ஸ்பெயின்தேசத்தில ஒருவன்வீட்டுக்கு யாராவது ஒருவன் விருந்தினனாய்ச் சென்றபோது, அவ்வீட்டிலுள்ள பொருள் ஏதாவதொன்றைக் கண்டு அவன் வியப்பானாயின், உடனே அவ்வீட்டுக்காரன் அப்பொருளை அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி, அவன் வீட்டைவிட்டுப் போம்போது அவன் பின்னேயே அந்தப் பொருளையெடுத்து அனுப்பிவிடுவான். வேண்டாமென்று நீ எவ்வளவு மறுத்துச்சொன்னாலும் கேட்கமாட்டான். ஆயின் அப்பொருளை அவன் புத்திமோசமாய் ஒருவேளை ஏற்றுக்கொள்வானாயின் அதனால் உடையவன் அவன்மேல் மிகவும் கோபம் கொண்டு எரிந்துவிழுவான்.

இவ்விஷயத்தில் சீனதேசத்தவர்களும் இவர்களுக்கு ஒப்பானவர்களே. ஆதலின் இப்பூமியில் கீழண்டைக்கோடியிலுள்ள சீனதேசத்தாருடைய வழக்கங்களும் நோக்கங்களும், மேலண்டைக் கோடியிலுள்ள தேசத்தாருடைய வழக்கங்களும் நோக்கங்களும் ஒரேமாதிரியாகவே இருக்கின்றன. மற்றவிஷயங்களிலோ அவர்கள் மிகவும் பேதப்பட்டவர்களாய் இருக்கின்றனர். சீனதேசத்திலே ரோஜாமலரில் வாதனையில்லையென்றும், பாதைகளில் வண்டியில்லையென்றும், கப்பல்களுக்கு அடிபாட்டமில்லையென்றும், நியாயாதிகாரிகளுக்கு மரியாதைக்குணம் இல்லையென்றும், வேலைக்காரர்களுக்கு ஒழிவுநாளில்லையென்றும் சொல்லுகின்றனர். அதிதிகளை இடதுபுறத்தில் உட்காரவைப்பது அவ்விடத்து மரியாதை; புத்தி கவலைப்பட்டால் முழங்காலைச் சொரிவது வாடிக்கை; புத்திக்கு இருப்பிடம் வயிறு என்பது அவர்களுடைய கொள்கை.

வாஸ்தவத்தை விசாரிக்கப்புகுந்தால் சீனதேசம் இடத்துக்கு எல்லாவிஷயத்திலும் நேர் எதிர்த்தட்டாயிருக்கின்றது. வில் சீனதேசம் பூமியின் கிழண்டைக்கோடி, இங்கிலாந்து மேண்டைக்கோடி; சபை முதலிய விடங்களுக்குப்போனால் சீனதேசத்தார் தொப்பியைத் தலையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அங்கிலேயர் தலையைவிட்டு வாங்கிவிடுகிறார்கள்; யாராவது காணவரும்போது சீனர் தம் கைகளையே ஒன்றோடொன்று பிசைந்து குலுக்குகிறார்கள், அங்கிலேயர் காணவந்தவர் கையைப் பிடித்துக் குலுக்குகிறார்கள்; விசனக்குறியான உடை சீனருக்கு வெளுப்பு, அங்கிலேயருக்குக் கறுப்பு; சீனர் வடகிழக்கைக் கிழக்கு வடக்கென்றும், தென்கிழக்கைக் கிழக்குத் தெற்கென்றும் சொல்லுகிறார்கள்; மேலும் தம் பட்டப்பெயரை முதலில் எழுதி இடுகுறிப்பெயரைப் பின்னால் எழுதுகிறார்கள்; அத்தேசத்தில் கிழவர்கள் காற்றாடி விடுவது, சிறுபிள்ளைகள் வேடிக்கை பார்ப்பது; பிள்ளைகள் பாடம் ஒப்புவிப்பதென்றால், உபாத்தியாயருக்குப் பின்புறமாய்த் திருப்பிக்கொண்டு தமக்குச் சக்தியானவளவு உரத்துக் கூவி ஒப்புவிப்பார்கள்.

ஒருகால் சீனதேசத்துக்கு யாத்திரைபோயிருந்த பிராஞ்சுதேசத்தான் ஒருவன் சீனதேசத்தாருடைய நடவடிக்கைகளைப்பற்றி அதிசயமான பல கதைகள் சொல்லுவான். அவற்றுள் ஒரு கதையை அவன் சொன்னவிதமாய் இதனடியில் சுருக்கி எழுதுகிறோம்:—

நாங்கள் சீனதேசம் போயிருந்தபோது அங்கே கண்டவர்கள் மிகவும் வியக்கத்தக்கதாய்ச் சீனர்களுடைய வழக்கங்களை வெளியிடுவதான ஒரு அதிசயக் காட்சியைக் கண்டோம். அங்கே பண்டிகை நாள் ஒன்று வந்தது; அன்றையதினம் நாங்கள் இறங்கியிருந்த வீட்டில் பண்டிகை கொண்டாடும்படி வழக்கப்படியே அவ்வூராரும் அண்டையயல் ஊர்களில் இருப்பவர்களுமாகிய யாவரையும் வரவழைத்தோம். அப்படியே யாவரும் வந்து சேர்ந்தார்கள். பண்டிகையைப்பற்றிய சடங்குகளெல்லாம் முடிந்தபின்பு வந்தவர்கள் எல்லோரும் எழுந்து தங்கள் தங்கள் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது அவ்வீட்டுக்கு உடையவன் வீட்டுவாயிலிலே போய் நின்று, ஒருவரும் எழுந்து வெளியே போகக்கூடாது; இன்றையதினம் யாவர்க்கும் நான் என் வீட்டில் விருந்து அளிக்கப்போகிறேன். எல்லோரும் இப்படியே நின்று விருந்துண்டு என்னைக் கனப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லி அங்குள்ளவர் அனைவரையும் தனித்தனி மறித்து வேண்டிக்கொண்டான். அதற்கு ஒவ்வொருவரும் தமக்கு ஏதோ ஒரு அவசியமான வேலையிருக்கிறதென்று சாக்குச் சொல்லிச் செலவுபெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். கடைசியில் அவனுடைய சிறந்த